சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,சென்னை-08

ந.க.எண். 7177/அ6 / 2024. நாள். 9 .09.2024

| | | |
|---|---|---|
| பொருள் | | தமிழ் வளர்ச்சித் துறை - 2024-25 ஆம் ஆண்டு நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாள் பேச்சுப்போட்டி நடத்துதல் - பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 13.09.2024 மற்றும் 17.09,.2024 ஆகிய நாள்களில் சென்னை மாவட்ட அனைத்து வகை பள்ளி மாணவர்களுக்கு பேச்சு போட்டிகள் நடத்துதல் -மாணவர்களை கலந்து கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்களுக்கு தெரிவித்தல் - தொடர்பு |
| பார்வை | | சென்னை-08, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்ஆ,மொ.4/3930 /2024 , நாள் 03 . 09. 2024 |

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை-08 தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குனர் அவர்களின் 03 . 09. 2024 நாளிட்ட செயல்முறையில் , தமிழ் வளர்ச்சித் துறையில் 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான மானிய கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி ,ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூக சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டு தோறும் அவர்களது பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்திப் பரிசு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது .

தமிழ் வளர்ச்சித் துறை - 2024 - 25 ம் ஆண்டிற்கு - பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 13.09.2024 அன்றும் , தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 17.09.2024 அன்றும் சென்னை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு நடபெற உள்ளன.

Scanned with OKEN Scanner

இப்பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ. 5000/- மும், இரண்டாம் பரிசு ரூ. 2000/- மும், வழங்கப்பெறும். மேலும் இப்போட்டியில் பங்கேற்று வெற்றிபெறும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/- வீதம் இரண்டு பேருக்கு மற்றும் சான்றிதழும் வழங்கப்பெறும்.

பேறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர்களின் பிறந்த நாள் பேச்சுப்போட்டிகள் 13.09.2024 மற்றும் ஆகிய நாள்களில் சென்னை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு வடசென்னை, மத்திய சென்னை. தென் சென்னை அளவில் நடைபெறவுள்ளன.

**பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் (13.09.2024) மற்றும் தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் (17.09.2024) நடைபெறும் இடம்**

| வ. எண் | சென்னை மண்டிலம் | வட்டாரம் | நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | தென் சென்னை | 1. அடையாறு<br>2. கோடம்பாக்கம்<br>3. தேனாம்பேட்டை | இராணி மேரி கல்லூரி, சென்னை – 04. | மு.ப. 9.00 - 12.30 |
| 2 | மத்திய சென்னை | 1. தண்டையார்பேட்டை<br>2. திருவொற்றியூர்<br>3. இராயபுரம்(வடக்கு)<br>4. இராயபுரம்(மத்தியம்)<br>5 இராயபுரம்(தெற்கு) | மாநிலக் கல்லூரி, சேப்பாக்கம். | மு.ப. 9.00 - 12.30 |
| 3 | வட சென்னை | 1. அண்ணா நகர்<br>2. திரு.வி.க. நகர் | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி. | மு.ப. 9.00 - 12.30 |

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள்

1. அண்ணாவின் மேடைத் தமிழ்
2. அண்ணாவின் அமெரிக்கப் பயணம்
3. அண்ணாவின் சாதனைகள் .

Scanned with OKEN Scanner

2. சமுதாய சீர்திருத்த இயக்கத்தின் தந்தை

3. சுயமரியாதை மாநாடு.

மேற்கண்ட வகையில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டிகள் நடத்தபெறும் என சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்துகொள்கிறொம். ஒரு போட்டிக்கு இருவர் எனத் தெரிவு செய்து இணைப்பிலுள்ள பங்கேற்பு படிவத்தினை நிறைவு செய்து Tvt.officiallanguage@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 12.09.2024 நாளுக்குள் அனுப்பி வைக்குமாறும், போட்டிகள் நடைபெறும் நாளன்று பங்கேற்புப் படிவத்துடன் வரப்பெறும் மாணவர்கள் மட்டுமே போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதியளிக்கப் பெறுவர் என்ற விவரத்தினை தெரிவித்திடுமாறும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட தலைப்புகளில் மட்டுமே போட்டிகள் நடைபெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது. மேலும் போட்டிகள் நடைபெறும் மையங்களாக அறிவிக்கப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் , போட்டியை நடத்துவதற்காக வருகை புரியும் தமிழ்வளர்ச்சி துறை அலுவலர்களுக்கு போட்டிகள் நடைபெறும் நாளன்று உரிய ஏற்பாடுகள் செய்து போட்டியினை சிறப்பாக நடத்திட சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்டுகிறது,

இணைப்பு

1. அறிஞர் அண்ணா போட்டி பரிந்துரைப் படிவம்.
2. தந்தை பெரியார் போட்டி பரிந்துரைப் படிவம்
3. போட்டிக்கான விதிமுறைகள் (மற்றும்) பங்கேற்புப்படிவம் .

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

1 கல்வி அலுவலர் (பெரு நகர சென்னை மாநகராட்சி)

2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் ,சென்னை மாவட்டம் .

3. சென்னை மாவட்ட அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள், தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது .

நகல்

1 சென்னை -06 பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

2 சென்னை -8 , தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner

தமிழ் வளர்ச்சித் துறை
சென்னை மாவட்டம்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

நாள் 13.09.2024

பங்கேற்புப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | மாணவரின் பெயர் (தமிழில்) | : | |
| 2 | பிறந்த நாள் / வயது | : | |
| 3 | பயிலும் பள்ளி / முகவரி (தொலைபேசி எண்ணுடன்) | : | |
| 4 | பயிலும் வகுப்பு | : | |
| 5 | இல்ல முகவரி / தொலைபேசி எண் | : | |
| 6 | கலந்து கொள்ளும் போட்டி | : | |
| 7 | மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) | : | 1.<br>2 |

**<u>பரிந்துரை</u>**

இப்பள்ளியில் பயிலும் செல்வன்/செல்வி ........................................................ தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் -------------------போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கிறேன்.

தலைமையாசிரியர் ஒப்பம்

நாள்:

அலுவலக முத்திரை

போட்டி நடைபெறும் நாளன்று
மாணவரின் ஒப்பம் ..............................................

Scanned with OKEN Scanner

# தமிழ் வளர்ச்சித் துறை
## சென்னை மாவட்டம்

### தந்தை பெரியார் பிறந்த நாள் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

நாள் 17.09.2024

பங்கேற்புப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | மாணவரின் பெயர் (தமிழில்) | : | |
| 2 | பிறந்த நாள் / வயது | : | |
| 3 | பயிலும் பள்ளி / முகவரி (தொலைபேசி எண்ணுடன்) | : | |
| 4 | பயிலும் வகுப்பு | : | |
| 5 | இல்ல முகவரி / தொலைபேசி எண் | : | |
| 6 | கலந்து கொள்ளும் போட்டி | : | |
| 7 | மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) | : | 1.<br>2 |

**பரிந்துரை**

இப்பள்ளியில் பயிலும் செல்வன்/செல்வி ........................................................ தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் --------------------போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கிறேன்.

தலைமையாசிரியர் ஒப்பம்

அலுவலக முத்திரை

நாள்:

போட்டி நடைபெறும் நாளன்று

மாணவரின் ஒப்பம் ........................................................

Scanned with OKEN Scanner

## பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி பொது விதி முறைகள்

1. போட்டியில் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.
2. கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டி நாளன்று முற்பகல் 09.00 மணிக்குள் தங்கள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும்.
3. போட்டியில் பங்கேற்கும் மாணவ/மாணவியர் பள்ளி ஆசிரியர் அல்லது பெற்றோருடன் மட்டுமே போட்டிக்கு வரவேண்டும் தனியாக மாணவ/மாணவிகளை அனுப்புதல் கூடாது. மாணவ/மாணவிகளுக்குப் பாதுகாப்பு, உணவு இவர்களின் பொறுப்பு.
4. பள்ளி மாணவ/மாணவியர் சீருடையில் வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க இயலும்.
5. போட்டியில் பேசுவதற்கு ஒருவருக்கு 3 நிமிடங்கள் மட்டுமே அளிக்கப்படும்.
6. வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்தல் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
7. போட்டிக்கான தலைப்புகள் தெரிவிக்கப்பட்டது.
8. இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பங்கேற்புப் படிவத்தை நிறைவு செய்து பள்ளி தலைமையாசிரியர் பரிந்துரையுடன் போட்டி தொடங்கும் முன்பு தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்களிடம் அளிக்கப்பட வேண்டும். பங்கேற்புப் படிவம் இல்லாத மாணவர்கள் போட்டியில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
9. 09.30 மணிக்கு மேல் வருகை தரும் மாணவர்கள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
10. போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5000/-, இரண்டாம் பரிசாக ரூ.3000/-, மூன்றாம் பரிசாக ரூ.2000/- மேலும் அரசுப் பள்ளியில் பயிலும் இரு மாணவர்களுக்கு சிறப்புப் பரிசாக தலா ரூ.2000/- வழங்கபெறும்.
11. போட்டிக்கானத் தலைப்புகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டமையால் குலுக்கல் முறையில் ஏதேனும் ஒரு தலைப்பில் பேச அனுமதிக்கப்படுவர். எனவே அனைத்து தலைப்பிலும் பேச ஆயத்தமாக வரவேண்டும்.
12. போட்டி உரிய நாளில் நடத்தப் பெற்று முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும்.
13. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

Scanned with OKEN Scanner